பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
25 11 2026 WEDNESDAY 12.40 PM
ஆகாஷ்வாணி
தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் சுகாதாரம் மற்றும் கல்வி முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. தமிழக கடலோரப்பகுதிகளில் Sea Vigil கடலோர பாதுகாப்பு ஒத்திகை இன்று தொடங்கியது.
3. ஆந்திர மாநிலத்தை சேர்ந்த காணாமல்போன ஏழு மீனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
5. சையத் மோடி பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் சுகாதாரம் மற்றும் கல்வி முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் புவனேஷ்வரில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நோயாளிகளின் பாதுகாப்புக்கு சுகாதாரத்துறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஹோமியோபதி மருத்துவ முறையின் நம்பகத் தன்மையை மேம்படுத்த அறிவியல் ஆராய்ச்சி இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நவீன ஆராய்ச்சி மூலம் ஹோமியோபதி கல்வி நிறுவனங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கிராமப்புற மக்களுக்கு அனைத்து மருத்துவ வசதிகளும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அறிவியல் ஆராய்ச்சி, சமூக பொறுப்புணர்வு, மருத்துவ கல்வி நிறுவனங்களின் பங்களிப்புடன் நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்த வேண்டும் என்று திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

பரம்வீர் சக்ரா விருது பெற்ற மேஜர் ராமசாமி பரமேஸ்வரனின் நினைவு தினத்தையொட்டி, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆபரேஷன் பவன் நடவடிக்கையின்போது நாட்டுக்காக அவர் இன்னுயிர் ஈந்ததாக கூறியுள்ளார்.

மேஜர் ராமசாமி பரமேஸ்வரனின் தியாகம் இளம் தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாகவும், நாடு அவரை நினைவு கூர்வதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவை சேர்ந்த ஏழு மீனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

கடந்த நான்காம் தேதி கடலுக்குள் மீன்பிடிக்க சென்ற இந்த மீனவர்கள் ஒடிஷாவின் பாரதீப் துறைமுகத்திற்கு அருகே காணாமல் போனதாக மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

இந்த மீனவர்கள் உடனான தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

காக்கிநாடா, சென்னை மற்றும் ஒடிஷாவில் உள்ள கடலோர காவல்படையினர் மீனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, மீனவர்கள் கடந்த 10-ஆம் தேதி கரைக்கு திரும்பியதாகவும், அன்றைய தினம் மீண்டும் கடலுக்குள் மீன்பிடிக்க சென்றதாகவும் காக்கிநாடா மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினம், விஜயநகரம் கடல் பகுதியில் மீனவர்கள் காணாமல் போயிருக்கக் கூடும் என்று அம்மாநில மீன்வளத்துறை கூறியுள்ளது.

<<<<<>>>>>

கோவாவில் நடைபெற்றுவரும் சர்வதேச திரைப்பட விழாவின் ஒருபகுதியாக இன்று சிறப்பு அணிவகுப்பு நடைபெற உள்ளது.

*Panjim Santa Monica* சுற்றுலா தளத்திலிருந்து இன்று மாலை தொடங்கும் இந்த அணிவகுப்பு, *Kala* அகாடமி சென்றடையும்.

கோவாவின் கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் கார்னிவெல் பேரணி, *Shigmo* விழா பேரணி, கோவா சுற்றுலாத் துறையின் பேரணிகளும் இந்த அணிவகுப்பில் இடம்பெற உள்ளன.

<<<<<>>>>>

தமிழக கடலோரப்பகுதிகளில் தீவிரவாத தாக்குதல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் *Sea Vigil* கடலோர பாதுகாப்பு ஒத்திகை இன்று தொடங்கியது.

கன்னியாகுமரி கடல் பகுதியில் இந்த பாதுகாப்பு ஒத்திகை தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – குமார்- 31 Sec.)*

<<<<<>>>>>

தமிழக அரசின் முதலீட்டாளர்கள் மாநாடு முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் சென்னையை அடுத்த கோவளத்தில் இன்று நடைபெற்றது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதன்மூலம், 58 ஆயிரத்து 214 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலீடுகள் ஈர்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

78 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இதில் கையெழுத்தானதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் 65 ஆயிரத்து 786 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு, போன்ற நவீன தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய, ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் திரு. *Harish Parvathaneni,* போரின் போது தொழில்நுட்பத்தை விட மனிதர்களின் கட்டுப்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், டிஜிட்டல் கருவிகள் மூலம் தாக்குதல்களை தடுக்கவும், பொது மக்களை பாதுகாக்கவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், தீவிரவாத அமைப்புகள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது என்றும் அவர் எச்சரித்தார்.

வளரும் நாடுகளுக்கும், நவீன தொழில்நுட்பத்தின் பலன்கள் கிடைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

கர்நாடகாவின் Belagavi மாவட்டத்தில் கரும்புத் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

28 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி சேதமடைந்ததாக உள்ளூர் விவசாயிகள் தெரிவித்தனர்.

தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இருப்பினும், கரும்புகள் முழுவதும் சேதமடைந்ததாக அவர்கள் கூறினர்.

இதற்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் மாநில அரசை கேட்டுக்கொண்டுள்ளனர்.

<<<<<>>>>>

சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சவூதி அரேபியாவின் இறையாண்மைக்கும், மக்களின் பாதுகாப்புக்கு எதிரான இந்த தாக்குதல், அப்பகுதியில் அமைதியை பாதிக்கும் என்று கூறியுள்ளது.

இந்த தாக்குதலில் இரண்டு இந்தியர்கள் காயமடைந்ததாகவும், அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்திய தூதரகம் அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் மக்கள் வசிக்கும் இடங்களில் நடைபெறும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

சவூதி அரேபியா அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் இந்தியா முழு ஆதரவளிப்பதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

இந்தியா – இலங்கை தேசிய மாணவர் படையின் சைக்கிள் பேரணி கொழும்பில் இருந்து தில்லி வரை நடைபெறுகிறது.

கொழும்பில் கடந்த 15-ஆம் தேதி கொடியசைத்து தொடங்கிவைக்கப்பட்ட இந்த மைத்ரி சேது பேரணி இலங்கையின் யாழ்பாணத்தை சென்றடைந்தது.

திரிகோணமலையிலிருந்து இந்திய கடற்படையின் ஐ என் எஸ் சுஜாதா கப்பல் மூலம் தேசிய மாணவர் படையின் இன்று இந்தியா வரவுள்ளனர்.

பின்னர், இந்தியாவில் 3 ஆயிரம் கிலோமீட்டர் சைக்கிள் பயணம் மேற்கொண்டு புதுதில்லியில் இந்த சைக்கிள் பேரணி நிறைவடையும்.

இந்தியா – இலங்கை இடையேயான கலாச்சார உறவுகளை மேம்படுத்தவும், புத்த பாரம்பரியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த சைக்கிள் பேரணியை தேசிய மாணவர் படை மேற்கொண்டுள்ளது.

<<<<<>>>>>

ஹோர்மூஸ் நீரிணையில் நான்கு எண்ணெய் கப்பல்கள், ஈரானின் தாக்குதலில் கடலில் மூழ்கியதாக அந்நாட்டு கடற்படை கூறியுள்ளது.

இதுகுறித்து, ஈரான் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த எண்ணெய் கப்பல்கள், கண்ணிவெடியில் சிக்கி வெடித்ததாக தெரிவித்துள்ளது.

ஹோர்மூஸ் நீரிணையில் தடை செய்யப்பட்ட பகுதிகள் வழியாக கப்பல்கள் செல்ல வேண்டாம் என்று ஈரான் வலியுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

சையத் மோடி பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, *21-8, 21-7* என்ற செட் கணக்கில், இந்தியாவின் *Rashmi Ganesh – Amrutha* இணையை வென்றது.

<<<<<>>>>>

போபால் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனீஷ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *6-2, 6-0* என்ற செட் கணக்கில், இந்தியாவின் பிரணவ் கார்த்திக்கை வென்றார்.

இப்போட்டியில் சசிகுமார் முகுந்த், அடில் கல்யாண்பூர், கபீர் *Hans* ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>

கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Sohini Sanjay, Jensi Dipak Bhai* ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

போபாலில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>